பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.05.2022 முதல் 11.05.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 036 (05) PJN/GKMS/2022 தேதி: 06.05.2022

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (02.05.2022 முதல் 05.05.2022 வரை) | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -11.05.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/05 | 03/05 | 04/05 | 05/05 | | நாள்-1 07/05 | நாள்-2 08/05 | நாள்-3 09/05 | நாள்-4 10/05 | நாள்-5 11/05 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 3 | 0 | 0 | 3 |
| 38 | 38 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 35 | 35 | 36 | 36 |
| 26 | 28 | 27 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 27 | 27 | 28 |
| 0 | 0 | 1 | 2 | மேக மூட்டம் | 5 | 5 | 3 | 3 | 3 |
| 56-70 | 67-88 | 55-87 | 59-80 | ஈரப்பதம் (%) | 60-75 | 60-75 | 60-75 | 60-75 | 60-75 |
| 6 | 4 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 10 | 10 | 10 | 14 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு | தெற்கு தென் மேற்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (07.05.2022 முதல் 11.05.2022 வரை):

→ **மே 07 மற்றும் 08 தேதிகளில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய லேசான முதல் மிதமான மழையும், மே 11 தேதியில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 27-36 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-75 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- மே 11 லிருந்து 17 வரை மழை (1.57 மி.மீ) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (34.72 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (25.23 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | வளர்ச்சி பருவம் | பருத்தியில் சாறு உருஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஹெக்டருக்கு இமிடாக்லோபிரைட் 17.8 SL 100 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% (300 ppm) 2500 மிலி தெளிக்கவும். |
| | | பருத்தியில் மாவுப் பூச்சியினைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய் 2 % (20 மி.லி/ லிட்டர்) அல்லது வேப்பங்கோட்டை சாறு 5 % அல்லது லிட்டருக்கு புயுப்ரோபிசின் 25 SC 2 மி.லி. கலந்த கரைசலை தெளிக்கவும். |
| | | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த 45வது நாட்களில் கைக்களை எடுக்கலாம் அல்லது ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளைப் பயன்படுத்தவும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த தண்ணீரை நன்கு பீய்ச்சி அடித்தும் மற்றும் ஏக்கருக்கு 8 மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளையும் வைத்து கட்டுப்படுத்தவும். இதன் தாக்குதல் அதிகமாக இருப்பின் வேப்பஎண்ணெய் 0.5 %+ டிவீன் 80 (0.005%) பயன்படுத்தவும். |
| பாகல் மற்றும் புடலை | காய்க்கும் பருவம் | பாகல் மற்றும் புடலையில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் (ஒரு மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), பீர்க்கனில் 250 பிபிஎம் (2.5 மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), விதைத்த 15 வது நாளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும் |

**குறுஞ்செய்தி: அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.**

**முதல்வர்**